**பள்ளேபொல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பள்ளேபொல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கிழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பள்ளேபொல வாரச்சந்தை நிர்மாணத்தின் பெறுமதி ரூபா 116,500 ஆல் கூடுதலாகவும் சிறுவர் பூங்கா பாதுகாப்பு வேலி நிர்மாணத்தின் பெறுமதி ரூபா 409,682 ஆல் குறைத்தும் மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(ஆ) பள்ளேபொல வாரச்சந்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாணத்திற்குரிய கடன்பட்டோர் மீதி ரூபா 288,589 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண நிச்சயிக்கப்பட்ட மானியங்களின் கீழ் நிலன்நோருவ விஹாரைக்கு அருகிலுள்ள வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம், சபையினால் செயற்படுத்தியதன் மூலம் கிடைத்த வருமானம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டமையால் சபையின் வருமானம் ரூபா 95,000 ஆல் குறைத்தும் கடன்கொடுத்தோர் சமமான தொகையால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) நாலன்த நீர்த்தேக்கத்தின் பெரிய தொட்டாச்சிணுங்கி அகற்றும் செயற்திட்டத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்கார அமைப்பிற்கு மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 230,300 குறைத்தும் மீள்நிரப்பப்பட வேண்டிய ரூபா 130,256 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உடைத்து அகற்றப்பட்ட ரூபா 143,800 கூட்டுத்தொகையான 03 கட்டிடங்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கிடைக்க வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,989,288 ஆக இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 763,245 கூட்டுத்தொகையான 08 மீதிகள் அதில் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய 12 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,412,363 ஆக இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 1,876,265 கூட்டுத்தொகையான 5 மீதிகளும் அதில் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(i)(i) ஆம் பிரிவு | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது மூன்று ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்து ரூபா 505,000 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 1987 இன் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,629,934 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,310,597 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,319,337 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) காணி விற்பனையின் பேரில் வரி**

---

சபை அதிகாரப் பிரதேசத்தின் எக்கமுத்துகம அகலவத்த மஹ கும்புர பீல்லவ என்ற பெயரிலான காணி 2010 ஆம் ஆண்டின் போது துண்டுகளாக்கி விற்பனை செய்ததன் பேரில் அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரித்தொகையிலிருந்து ரூபா 38,625 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

---

2000 இன் 53 ஆம் இலக்கம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 8 வியாபாரங்களுக்காக அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நீர்க் கட்டணம்**

---

அலுத்கம நீர் முன்மொழிவுத் திட்டத்தின் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்ட 5 நீர்ப் பாவனையாளர்களடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 13,134 ஆன நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) ஆதனவரி**

---

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 171,797 ஆக இருந்ததுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1) இன் பிரகாரம் நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 181,830 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 8,139,347 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன. இந் நீதிமன்றத் தண்டப்பண மீதியில் 2011 ஆண்டிற்குரிய நிலுவை ரூபா 26,000 ஆக இருந்தது.

**(ஊ) ஏனைய வருமானம்**

---

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 29,301 ஆக இருந்ததுடன், நிலுவை கழிவுப்பொருள் கட்டண மீதி ரூபா 72,456 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்கு இணைக்கப்பட்டிருந்த வேலை அத்தியட்சகரொருவர் இருக்கும் போது பள்ளேபோல நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2015 இன் கீழ் கட்டிட

திட்டங்களைத் தயாரிப்பதற்காக வெளிநபரொருவருக்கு ரூபா 32,252 ஆன படியொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபை அலுவலகம் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக கையேற்கப்படாததன் காரணமாக சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த 2 வழக்குகளுக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சட்டத்தரணிகள் கட்டணமாக ரூபா 161,500 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) பெக்கோ இயந்திரம் வீட்டின் மேல் விழுந்தமை காரணமாக அவ்வீட்டிற்கும் இயந்திரத்திற்கும் முறையே ரூபா 212,734 மற்றும் ரூபா 1,177,955 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விபத்திற்கு பொறுப்பாக இருக்க வேண்டிய தரப்பினர் நிச்சயிக்கப்படாதிருந்ததுடன் குறித்த வீட்டை திருத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பள்ளேபொல நகரில் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை தாபிப்பதற்கு கட்டிட வசதிகளை வழங்கப்படாமல் அதற்காக ரூபா 1,249,840 செலவு செய்து தேவையான தளபாடங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை முழுமையாக பயன்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) மொனரவில வேரவத்தேகம “ கிரீன் வெலி காட்னஸ்” (Green valley Gardens) காணி ஏலவிற்பனையின் போது சபைக்கு பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இரண்டு காணித் துண்டுகள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 50 நீர்ப் பாவனையாளர்களுக்கு நீர்மானிகள் பொருத்தப்படாமல் ரூபா 200 நிலையான மாதாந்த கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன், 173 பேரின் நீர்மானிகள் செயற்படாதிருந்த போதிலும், திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

(அ) 2015 மார்ச் 12 ஆந் திகதிய 2015/02 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின், உள்ளூரட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றம் வரையரைகளுக்கு முரணாக சபை வேலை அத்தியட்சகருக்கு ரூபா 11,750 ஆன இணைந்த படியும் ரூபா 20,892 ஆன மைல் கட்டணமொன்றும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1992 பெப்ரவரி 26 ஆந் திகதிய 05/01/119 டெ.ix ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரின் கடிதத்தின் ஏற்பாடுகளிலிருந்து விலக கடமை நேரத்தில் நடாத்தப்பட்ட 03 திட்டமிடல் குழுக்களுக்காக 09 ஊழியர்களுக்கு ரூபா 10,000 குழுப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) மத்திய மாகாணத்தின் உள்ளுராட்சி மன்ற அமைச்சு செயலாளரின் 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதிய சீபீசீ/சீஎம்எஸ்/1/6/14 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரை சேவையில் ஈடுபடுத்தி 2015 ஏப்ரல் வரை ரூபா 172,000 தொகை படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2014 மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரீ.பீ.தென்னகோன் ஞாபகார்த்த சிறுவர் பூங்காவின் காணி மற்றும் வேலி அமைக்கும் ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது வழங்கப்பட்ட முற்பணத்தை கழித்துக்கொள்ளாமல் நிறுத்தி வைத்தல் வரை மொத்த பணத்தையும் செலுத்தியமையால் ரூபா 190,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பள்ளேபொல நகர அபிவிருத்தியின் கீழ் 4 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 4,000,000 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 3,500,000 ஆன நிதிஏற்பாட்டின் பேரில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பலநோக்கு கட்டிடத்தின் 2 ஆம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நகர கூட்ட மண்ட மண்டபத்தை மேம்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்ப நிலைய நிர்மாணத்தின் செயற்திட்டங்களுக்காகவும் முறையே ரூபா 649,551 தொகை மற்றும் ரூபா 249,324 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உருக்குலைந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்றையும் கை உழவு இயந்திரமொன்றையும் பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அங்கு 36 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமான விடயங்களுக்கிடையே 33 சதவீதம் முதல் 1335 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிலான விலகலும் 17 மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவின விடயங்களுக்கிடையே 34 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் விலகல்களும் காணப்பட்டன.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 5(7) ஆம் விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை தாபிப்பதற்கு தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) மனித முகாமைத்துவம்